# மதுரை மாநகராட்சி

## மாண்புமிகு மேயர் தலைமையில் நடைபெற்ற

## 31வது மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்

## 27.09.2024ம் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1. ந.க.எண்.ஓ1/000303/2024**

மதுரை மாநகராட்சி ஜெய்ஹிந்த்புரம் நடுநிலைப்பள்ளி தனியார் கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகின்றது. அதற்கான மாத வாடகை மாமன்ற தீர்மானம் எண்.264 நாள் 10.11.2017ன்படி 01.06.2016 முதல் ரூ.20,420/- என நிர்ணயம் செய்யப்பட்டு மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது மேற்காணும் பள்ளி கட்டிட உரிமையாளர் மாத வாடகையினை உயர்த்தி வழங்க கோரிய கோரிக்கை மனு பரிசீலிக்கப்பட்டு, 2023-2024ஆம் ஆண்டு விலை விகிதப்படி மாதாந்திர வாடகை தொகையினை 01.08.2024 முதல் ரூ.20,420/- லிருந்து ரூ.26,402/- (ரூபாய் இருபத்து ஆறாயிரத்து நானூற்று இரண்டு மட்டும்) ஆக உயர்த்தி கட்டிட உரிமையாளர் திரு.எஸ்.சாமிநாதன் என்பவருக்கு வழங்குவதற்கும், இதனால் ஏற்படும் செலவினத் தொகையினை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 632**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2. ந.க.எண்.ஓ3/018014/2013**

மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பாண்டியன் நெடுஞ்செழியன் மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள நூலகத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் தொகுப்பூதியத்தில் நூலகராக பணிபுரிந்து வரும் திருமதி.கா.கனகதுர்கா என்பவரின் பணிக்காலம் 31.08.2024ந் தேதியுடன் முடிவடைந்து விட்டது. அன்னாரின் 05.08.2024ந் தேதிய மனுவில் 01.09.2024 முதல் மீண்டும் பணிநீட்டிப்பு செய்து தருமாறும், குடும்ப சுழ்நிலை காரணமாக ஊதியத்தினை உயர்த்தி வழங்குமாறும் கோரியிருந்த, அன்னாரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பள்ளி மாணவர்களின் நலன் கருதி திருமதி.கா.கனகதுர்கா என்பவருக்கு 01.09.2024 முதல்

31.08.2025 வரை ஒரு வருடத்திற்கு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணிநீட்டிப்பு செய்தும்,

ஏற்கனவே பெறப்பட்டு வந்த மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.15,000/- லிருந்து ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆக 01.09.2024 முதல் உயர்த்தியும், இதனால் ஏற்படும் செலவினத் தொகை ரூ.20,000 x 12 மாதங்கள் – ரூ.2,40,000/- யை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 633**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>3.ந.க.எண்.ஓ8/012020/2022</u>**

மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் உணவுப் பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 126 தன்னார்வ பணியாளர்களுக்கு மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.179 நாள் 03.04.2023 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.243 நாள் 26.06.2023ன்படி மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.1500 வீதம் மாநகராட்சி ஆரம்பக்கல்விநிதியிலிருந்து மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, அரசாணை நிலை எண்.33 சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை நாள் 07.06.2023ன்படி மூன்றாம் கட்டமாக மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட முத்துப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 61 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 25.08.2023ந் தேதி முதல் விரிவுப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்காணும், அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 61 மாணவ, மாணவியர்களுக்கு உணவு பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ஒரு தன்னார்வ பணியாளருக்கு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரின் 19.09.2023ந் தேதிய பரிந்துரையின் பேரிலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1 நாள் 02.11.2022ன்படியும் கடந்த 25.08.2023 முதல் மாதந்தோறும் ரூ.1500 வீதம் தொடர்ந்து மதிப்பூதியம் வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 634**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4. ந.க.எண்.ஓ4/010536/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் செயல்பட்டு வரும் LKG மற்றும் UKG வகுப்புகளுக்கு நிர்வாக நலன் கருதியும், மாணவர்களின் நலன் கருதியும் 2023-2024 கல்வியாண்டில் ஏற்கனவே பணிபுரிந்து வந்த 75 கே.ஜி.ஆசிரியர்கள் மற்றும் 63 உதவியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக **2024-2025ஆம் கல்வியாண்டில் 06.09.2024ந் தேதியுடன் 89 நாட்கள் முடிடைவகிறது. 07.09.2024 (சனிக்கிழமை) மற்றும் 08.09.2024 (ஞாயிற்றுக்கிழமை) தவிர்த்து 09.09.2024 ஒரு நாள் பணிமுறிவிப்பிற்கு பின்னர் 10.09.2024 முதல் 07.12.2024 வரை 89 நாட்கள் மட்டும் பணியமர்த்தி கொள்வதற்கும்,**

**கே.ஜி.ஆசிரியர்களுக்கு ஒரு நபருக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.8000/- என்ற அடிப்படையிலும், உதவியாளர்களுக்கு ஒரு நபருக்கு மாதாந்திர மதிப்பூதியம் ரூ.3500/- என்ற அடிப்படையிலும்** இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான கே.ஜி. ஆசிரியர்களுக்கு (நாள் ஒன்றுக்கு ரூ.267 x 89 நாட்கள் x 75 நபர்கள்) ரூ.17,82,225/- (ரூபாய் பதினேழு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து ஐந்து மட்டும்) மற்றும் உதவியாளர்களுக்கு (நாள் ஒன்றுக்கு ரூ.117 x 89 நாட்கள் x 63 நபர்கள்)ரூ.6,56,019/- (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து பதினொன்பது மட்டும்)-னையும் மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து வழங்குவதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 635**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5. ந.க.எண்.ஓ4/015135/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 15 மேல்நிலைப்பள்ளிகளில் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதியும் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட 68 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை **2024-2025ஆம் கல்வியாண்டில் 06.09.2024ந் தேதியுடன் 89 நாட்கள் முடிடைவகிறது. 07.09.2024 (சனிக்கிழமை) மற்றும் 08.09.2024 (ஞாயிற்றுக்கிழமை) தவிர்த்து 09.09.2024 ஒரு நாள் பணிமுறிவிப்பிற்கு பின்னர் 10.09.2024 முதல் 07.12.2024 வரை 89 நாட்கள் மட்டும்**

**பணியமர்த்தி கொள்வதற்கும், அன்னார்களுக்கு ஒரு நபருக்கு மாதாந்திர மதிப்பூதியமாக ரூ.13,000/- என்ற அடிப்படையில் வழங்குவதற்கும்,**

மேற்காணும் விவரப்படி 68 நபர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (நாள் ஒன்றுக்கு ரூ.433 x 89 நாட்கள் x 68 நபர்கள்) ரூ.26,20,516/- (ரூபாய் இருபத்து ஆறு இலட்சத்து இருபதாயிரத்து ஐநூற்று பதினாறு மட்டும்)-யை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து வழங்குவதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 636**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6. நக.எண்.ஓ4/017586/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் 96 பள்ளிகளில் சுகாதார நலன் பேணும் பொருட்டு நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் சுகாதார நலன் கருதியும் 2024-2025ம் கல்வியாண்டிற்கு 120 தூய்மை பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.21787/2021/EA2 நாள் 28.10.2021ல் நிர்ணயம் செய்துள்ளவாறு நாள் ஒன்றுக்கு ரூ.391/- மட்டும் ஊதியம் என்ற அடிப்படையில் **2024-2025ஆம் கல்வியாண்டில் 01.09.2024ந் தேதியுடன் 89 நாட்கள் முடிடைவகிறது. 02.09.2024 ஒரு நாள் பணிமுறிவிப்பிற்கு பின்னர் 03.09.2024 முதல் 30.11.2024 வரை 89 நாட்கள் மட்டும் பணியமர்த்தி கொள்வதற்கும்**, இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (நாள் ஒன்றுக்கு ரூ.391 x 89 நாட்கள் x 120 நபர்கள்) ரூ.41,75,880/- (ரூபாய் நாற்பத்து ஒரு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்)-யை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து வழங்குவதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 637**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

7. **E7/Est.No.537/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–88ல் உள்ள அனுப்பானடி உபகழிவு நீரேற்று நிலையத்தில் புதிதாக 60HP Sewage Submersible மற்றும் பைப் லைன் அமைக்கும் பணிக்கு ரூ.46.50/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 11.06.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 26.07.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு.G. திருவேங்கடம் : மதிப்பீடு விலையை விட 0.20% குறைவு

2. திரு.P.ராஜேஷ் : மதிப்பீடு விலையை விட 4.39% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு.G.திருவேங்கடம் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 20.08.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 638**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8. E7/Est.No.501/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்–70ல் உள்ள நேருநகர் போடி லயன் பகுதிகளில் புதிய பாதாள சாக்கடை தொட்டி மற்றும் பைப் லைன் அமைக்கும் பணிக்கு ரூ.23.80/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 14.03.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 08.07.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/S. கிளாசிக் இஞ்ஜினியரிங் : மதிப்பீடு விலையை விட 3.10% அதிகம்
2. M/S. ஸ்ரீவிசாலாட்சி & கோ : மதிப்பீடு விலையை விட 7.84% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/S. கிளாசிக் இஞ்ஜினியரிங் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 3.10% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். மேலும் விலைகுறைப்பு கோரப்பட்டத்தில் 0.01% குறைவான விலைவிகிதத்தில் பணியை செய்து தர சம்மதம் தெரிவித்ததை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 20.08.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 639**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9. E6/Est.No.466/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்–67 மற்றும் 68ல் உள்ள ஜெய்நகர்(Extn), பென்னர் நகர் 1,2,3 ரோடு, HMS காலனி 2வது ரோடு, இருதயநகர் விரிவாக்கம், M.M.நகர் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் Wet Mix Macadam Surface சாலை அமைக்கும் பணிக்கு ரூ.15.00/- லடசத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 22.02.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 04.03.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/S. Headway கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட 0.22% குறைவு
2. M/S. பாலாஜி & கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட 3.39% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/S. Headway கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.22% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று

ஆணையாளர் அவர்களிடம் 15.03.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 640**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10. E7/003096/24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–48ல் உள்ள கிருஷ்ணாபுரம் 3வது தெருக்குட்பட்ட (சர்வே வார்டு–1 பிளாக் எண்–98 நகர்புல எண்–131 கட்டுப்பட்டு பரப்பு 450 ச.மீ ஆணையாளர் மதுரை மாநகராட்சி பெயரில் உள்ளது. இந்த இடத்தில் நகர்ப்புற நலவாழ்வு மையம் அமைந்துள்ளது. இதில் மீதமுள்ள 527ச.அடி காலியிடத்தில் மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் நியாய விலைக்கடை கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண்: 641**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11. E7/003265/24**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்கள் –1,2,3&4 Main Office-க்கு ஓட்டுநர்கள், மெக்கானிக், எலக்ட்ரிசியன், மெக்கானிக் உதவியாளர், Executive Assistants, தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் Unskilled Worker மொத்தம் = 123 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் அதே ஊதிய விகிதத்தில் கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation -CLF) மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக ஊதியம் வழங்குவதற்கு 27.07.2024 முதல் 26.09.2024 வரை கால நீட்டிப்பு செய்து மாமன்ற தீர்மான எண்: 595 நாள் 28.08.2024ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தற்போது 26.09.2024வுடன் கால நீட்டிப்பு முடிவடைந்து விட்டதால் கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation -CLF) மகளிர் சுய உதவி குழுக்கு மேலும் மூன்று மாத காலத்திற்கு 27.09.2024 முதல் 26.12.2024 வரை சப்ளை உத்தரவு மற்றும் கால நீட்டிப்பு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 642**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12. E7/004275/24**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்கள் –1,2,3&4 மற்றும் Main Office-க்கு Unskilled Worker மொத்தம் = 152 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் அதே ஊதிய விகிதத்தில் கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation -CLF) மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக ஊதியம் வழங்குவதற்கு 26.07.2024 முதல் 25.09.2024 வரை கால நீட்டிப்பு செய்து மாமன்ற தீர்மான எண்: 596 நாள் 28.08.2024ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தற்போது 25.09.2024வுடன் கால நீட்டிப்பு முடிவடைந்து விட்டதால் கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation -CLF) மகளிர் சுய உதவி குழுக்கு

மேலும் மூன்று மாத காலத்திற்கு 26.09.2024 முதல் 25.12.2024 வரை சப்ளை உத்தரவு மற்றும் கால நீட்டிப்பு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 643**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13. E2/Est.No.507/24-25**

மதுரை மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்–5ல் உள்ள எரிவாயு தகன மயானத்தில் புதியதாக காத்திருக்கும் அறை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.22.20/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 30.05.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 08.07.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/S. NPK Associates : மதிப்பீடு விலையை விட 0.59% குறைவு
2. திரு. C.சிவக்குமார் : மதிப்பீடு விலையை விட 7.85% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/S. NPK Associates என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.59% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 08.08.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 644**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14. E6/Est.No.523/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–49ல் உள்ள கீழமாரட் வீதியில் உள்ள மேல்நிலைத் தொட்டியை மராமத்து செய்யும் பணிக்கு ரூ.5.35/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 10.06.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 06.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/S. சசி பில்டர்ஸ் : மதிப்பீடு விலையை விட 0.30% குறைவு
2. திரு.K.கணேசன் : மதிப்பீடு விலையை விட 4.28% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/S. சசி பில்டர்ஸ் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 20.08.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 645**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15. E6/Est.No.305/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்–31ல் உள்ள அறிஞர் அண்ணா மாளிகை வளாகம் மேற்குப்புறம் (வடக்குப்பக்கம்) பொது கழிப்பறை மராமத்து செய்யும் பணிக்கு ரூ.9.90/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 05.03.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 10.06.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு.R.உதயக்குமார் : மதிப்பீடு விலையை விட 0.20% குறைவு
2. திரு.N.பிச்சைமணி : மதிப்பீடு விலையை விட 3.39% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு.R.உதயக்குமார் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 30.08.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 646**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16. E6/Est.No.577/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–5 வார்டு எண்–95ல் உள்ள நேதாஜிநகர் 2வது தெருவில் புதியதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற துணை சுகாதார மையம் மற்றும் மாமன்ற அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர், பேவர்பிளாக் சாலை மற்றும் கழிவுநீர் தொட்டி அமைக்கும் பணிக்கு ரூ.10.00/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 22.07.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 22.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/S. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட 0.30% குறைவு
2. திரு.R.உதயக்குமார் : மதிப்பீடு விலையை விட 4.28% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/S. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.30% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 647**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17. E6/Est.No.404/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–44ல் உள்ள புதிய மண்டலம்–4 (தெற்கு) அலுவலகத்திற்கு புதிதாக டேபிள் மற்றும் சேர் வசதிகள் அமைக்கும் பணிக்கு ரூ.6.30/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 25.06.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு

பெறப்பட்டு 22.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு.M.ஜெயக்குமார் : மதிப்பீடு விலையை விட 0.01% குறைவு
2. திரு.M.ராஜா : மதிப்பீடு விலையை விட 4.99% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு.M.ஜெயக்குமார் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 648**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**18. E6/Est.No.531/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–41ல் உள்ள புதுராம்நாட் ரோட்டில் அமைந்துள்ள சன்னியாசி ஊரணி மேல்நிலைத் தொட்டி மராமத்து பணிக்கு ரூ.7.60/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 19.07.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 20.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திருமதி.B.பவானி : மதிப்பீடு விலையை விட 0.41% குறைவு
2. திரு.M.மகேஷ் கண்ணன் : மதிப்பீடு விலையை விட 4.17% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திருமதி.B.பவானி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.41% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 649**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19. E6/Est.No.532/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–44ல் உள்ள CMR ரோட்டில் அமைந்துள்ள ஜோசப் பார்க்கில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டி–1 மராமத்து பணிக்கு ரூ.6.50/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 19.07.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 20.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திருமதி.B.பவானி : மதிப்பீடு விலையை விட 0.25% குறைவு
2. திரு.M.மகேஷ் கண்ணன் : மதிப்பீடு விலையை விட 4.34% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திருமதி.B.பவானி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024

அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 650**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**20. E6/Est.No.533/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–44ல் உள்ள CMR ரோட்டில் அமைந்துள்ள ஜோசப் பார்க்கில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டி–2 மராமத்து பணிக்கு ரூ.8.40/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 19.07.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 20.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திருமதி.B.பவானி : மதிப்பீடு விலையை விட 0.23% குறைவு
2. திரு.M.மகேஷ் கண்ணன் : மதிப்பீடு விலையை விட 4.35% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திருமதி.B.பவானி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.23% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 651**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**21. E6/Est.No.573/23-24**

மதுரை மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்–41ல் அமைந்துள்ள பொது கழிப்பிடம் மராமத்து பணிக்கு ரூ.6.55/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 19.07.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 22.08.2024 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு.V.பாண்டி : மதிப்பீடு விலையை விட 0.14% குறைவு
2. திரு.T.பாஸ்கரன் : மதிப்பீடு விலையை விட 3.45% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு.V.பாண்டி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.14% குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 13.09.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்குவதற்க்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 652**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**22. J2/Amrut 2.0/00969/2024**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியுடன் கடந்த 2011-ம் ஆண்டு இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளில் வைகை ஆற்றின் தென்கரைப் பகுதிகளில் இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளுக்கு புதியதாக பாதாள சாக்கடை அமைப்பினை

ஏற்படுத்தவும், வைகையாற்றின் வடகரைப் பகுதிகளல் விடுபட்ட பகுதிகளுக்கும், புதியதாக விரிவாக்கமடையும் பகுதிகளுக்கும், மதுரை மாநகரில் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களை சீரமைக்கவும் ரூ.**452.42–**கோடி திட்டமதிப்பீட்டில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள (Amrut 2.0-UGSS) அரசாணை எண்.148 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :22.11.2023-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் இத்திட்டப்பணிக்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதிஉதவியுடன் (SMIF-TN-III) (PSGF) மானியமாக ரூ.111.52–கோடியாகவும், (SMIF-TN-III) TNUDF (Loan) கடன் தொகையாக ரூ.111.53-கோடியாகவும், மத்திய அரசின் மானியமாக ரூ.113.11-கோடியாகவும், மாநில அரசின் மானியமாக ரூ.135.73-கோடியாகவும் ஆக மொத்தம் ரூ.471.89–கோடி என பணியின் மதிப்பு திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக TNUIFSL நிறுவனத்தின் 19.01.2024–ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

TNUIFSL நிறுவனத்தின் 29.08.2024–ந் தேதிய இரண்டு (PSGF/TNUDF) கடிதங்களின் மூலம் இத்திட்டப்பணிக்கு ADB (PSGF) மானியமாக ரூ.111.52–கோடியாகவும், ADB (Loan) கடன் தொகையாக ரூ.111.53-கோடியாகவும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு கடன்தொகை வழங்க TNUIFSL நிறுவனத்தினரால் மாநகராட்சியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள Loan Agreement & Trippatte Agreement விபரம் பின்வருமாறு.

## LOAN AGREEMENT

BETWEEN

TAMIL NADU URBAN INFRASTRUCTURE TRUSTEE COMPANY LIMITED, a Public Limited Company within the meaning of The Companies Act, 2013, having its registered office at No.19, T.P.Scheme Road, Raja Street Extension, R.A.Puram, Chennai – 600 028, acting in its capacity as Trustee of the TAMIL NADU URBAN DEVELOPMENT FUND (TNUDF), a trust within the meaning of the Indian Trusts Act, 1882 (Act II of 1882), duly constituted by the Deed of Trust dated 29th NOVEMBER, 1996 registered as document no.775 of 1996 in the Office of the Joint I Sub-Registrar, Chennai – Central and represented herein by its Fund Manager and agent, the TAMIL NADU URBAN INFRASTRUCTURE FINANCIAL SERVICES LIMITED, a Public Limited Company within the meaning of the Companies Act, 2013, having its registered office at No.19, T.P.Scheme Road, Raja Street Extension, R.A.Puram, Chennai – 600 028, hereinafter referred to as the 'Lender', which expression shall, unless it be repugnant to the subject or context thereof, include its successors and assigns of the ONE PART;

AND

Madurai City Municipal Corporation, a statutory body constituted under the **Madurai City Municipal Corporation Act** 1971 (**MCMC Act 1971**) having its office at **Aringar Anna Maligai, Tallakulam, Madurai-2**, here in after referred to as 'Borrower', which expression shall, unless it be repugnant to the subject or context thereof, include its successors-in-interest of the OTHER PART;

WHEREAS

1. The Lender desires to provide financial assistance to Urban Local Bodies and Statutory Boards undertaking Infrastructure Projects in the State of Tamil Nadu like Water Supply Scheme, Solid Waste Management, Sewerage & Sanitation, Roads, Transport Infrastructure, Sites and

Services, Area Development, Other remunerative and non-remunerative urban infrastructure projects contributing to the improvement of the living standards of the urban population.

2. The Borrower desires to obtain finance for implementing Water Supply Improvement Scheme Project in Madurai City Municipal Corporation, which is more fully described in ANNEXURE – 'A' hereto, hereinafter referred to as the "Project", and has requested the Lender to lend monies to the Borrower to enable the Borrower to undertake and complete the Project, which the Lender has agreed to.
3. The Parties have decided to reduce the terms and conditions mutually agreed to, into writing, through these presents.

**Tripartite Agreement**

BETWEEN

TAMIL NADU URBAN INFRASTRUCTURE TRUSTEE COMPANY LIMITED, a Public Limited Company within the meaning of The Companies Act, 2013, having its registered office at No.19, T.P.Scheme Road, Raja Street Extension, R.A.Puram, Chennai – 600 028, acting in its capacity as Trustee of the TAMIL NADU URBAN DEVELOPMENT FUND (TNUDF), a trust within the meaning of the Indian Trusts Act, 1882 (Act II of 1882), duly constituted by the Deed of Trust dated 29th NOVEMBER, 1996 registered as document no.775 of 1996 in the Office of the Joint I Sub-Registrar, Chennai – Central and represented herein by its Fund Manager and agent, the TAMIL NADU URBAN INFRASTRUCTURE FINANCIAL SERVICES LIMITED, a Public Limited Company within the meaning of the Companies Act, 2013, having its registered office at No.19, T.P.Scheme Road, Raja Street Extension, R.A.Puram, Chennai – 600 028, hereinafter referred to as the 'Lender', which expression shall, unless it be repugnant to the subject or context thereof, include its successors and assigns of the FIRST PART;

AND

Madurai City Municipal Corporation, a statutory body constituted under the **Madurai City Municipal Corporation Act 1971 (Madurai Corporation Act 1971)** having its office at **Aringar Anna Maligai, Tallakulam, Madurai-2,** here in after referred to as 'Borrower', which expression shall, unless it be repugnant to the subject or context thereof, include its successors-in-interest of the SECOND PART;

AND

**Indian Bank,** (Name of the Bank) a Body Corporate constituted under the Banking Companies (Acquisition & Transfer of Undertaking) Act 1970 having its Corporate Office at 254-260**, Avvai Shanmugam salai, Royapettah, Chennai - 600014** and having branch at **Tallakulam** here in after referred to as the "Banker" for the Borrower for depositing revenues which expression shall, unless it be repugnant to the subject or context thereof, include its successors-in-interest of the THIRD PART

WHEREAS the Lender sanctioned a sum of Rs.111.53 crores (Rupees Hundred and eleven crores and fifty three lakhs only) as Loan to Borrower for implementation of Underground Sewerage Scheme in Madurai City Municipal Corporation hereinafter referred to as the "Project" and executed Loan Agreement.

WHEREAS one of the terms and conditions of the Loan Agreement is to open a Savings Bank Account with the Banker, for depositing all the Project revenues and for making payments to all the Project related expenditure, loan instalment & operation & maintenance and enter into a Tripartite Agreement with the Lender, Borrower and Banker which the Borrower agreed to.

WHEREAS the Borrower approached the Banker for opening a Savings Bank Account, which the Banker has agreed to and opened a Savings Bank Account, hereinafter referred to as the "Designated Project Account" bearing **Indian Bank, Tallakulam Branch, SB Account No.7694985305 (IFSC : IDIB000T003), COMMISSIONER, CORPORATION OF MADURAI, AMRUT 2.0 UNDER SEWERAGE SCHEME.**

மேற்கண்ட இத்திட்டப்பணிக்காக மானியம் ரூ.111.53–கோடியும், மற்றும் கடன்தொகை ரூ.111.52–கோடி வழங்க TNUIFSL நிறுவனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் விவரம் பின்வருமாறு.

## Grant Sanction Conditions

1) **Amount of Loan:** Rs. 111.52 Crores (Rupees Hundred and eleven crores and fifty two lakhs only )

2) **Project:** Providing Underground Sewerage Scheme in Madurai City Municipal Corporation

3) **Project Cost:** Rs.471.89 Crores

4) **Financing Plan:**

| Sl.No | Means of Finance | Amount (Rs. in Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF-TN-III | 111.53 | 23.64% |
| 2 | Grant from Project Sustainability Grant Fund ( PSGF) under KfW assisted SMIF-TN-III | 111.52 | 23.63% |
| 3 | Grant form Government of India under AMRUT 2.0 | 113.11 | 23.97% |
| 4 | Grant form Government of Tamil Nadu under AMRUT 2.0 | 135.73 | 28.76% |
| | **Total** | **471.89** | **100.00%** |

5) **Completion Period:**

The proposed Project should be completed within three years from the date of commencement of project.

6) **Last date of withdrawal:**

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of execution of Grant terms & conditions

7) **Special terms & conditions:**

a) **Procurement Guidelines:**

The ULB shall follow Tamil Nadu Transparency in Tenders Act, 1998 for selection of contractors and execution of works. The ULB shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

b) The ULB shall open a separate "Project Account" for the sub-project assisted under SMIF-TN-III in the Books of Accounts of the Corporation.

c) The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under SMIF-TN-III separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the ULB and maintained separately. The ULB shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2025. The ULB shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) **Statement of Expenditure and Progress report**
The ULB shall provide monthly progress report and statement of expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

e) **Environmental, Climate Change & Social Management Framework :**
The ULB shall implement the Project according to the Environmental, Climate Change & Social Management Framework (ECSMF) developed by TNUIFSL.

**Loan Sanction Conditions**

1) **Amount of Loan:** Rs. 111.53 Crores (Rupees Hundred and eleven crore fifty three lakhs only)

2) **Project:** Underground Sewerage Scheme in Madurai City Municipal Corporation

3) **Project Cost:** Rs.471.89 Crores

4) **Rate of Interest:** 8.10%

5) **Principal Moratorium:** 5 years

6) **Repayment Period:** 15 years

7) **Financing Plan:**

| Sl.No | Means of Finance | Amount (Rs. in Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF-TN-III | 111.53 | 23.64% |
| 2 | Grant from Project Sustainability Grant Fund ( PSGF) under KfW assisted SMIF-TN-III | 111.52 | 23.63% |
| 3 | Grant form Government of India under AMRUT 2.0 | 113.11 | 23.97% |
| 4 | Grant form Government of Tamil Nadu under AMRUT 2.0 | 135.73 | 28.76% |
| | **Total** | **471.89** | **100.00%** |

8) **Completion Period:**

The proposed Project should be completed within three years from the date of commencement of project.

9) **Last date of withdrawal:**

Unless TNUIFSL agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

**10) Special terms & conditions:**

**a) Procurement Guidelines:**

The ULB shall follow to Tamil Nadu Transparency in Tenders Act, 1998 for selection of contractors and execution of works. The ULB shall undertake the selection of contractors only after TNUIFSL approves the selection procedure.

**b) House Service Connection Deposit & User Charges (Tariff) :**

The ULB shall levy and collect from the beneficiary(ies) the deposit & tariff as per the following deposit & tariff structure.

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs./month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| <600 | 7500 | 15000 | 120 | 360 |
| 601-1200 | 10000 | 20000 | 150 | 450 |
| 1201-1800 | 12500 | 25000 | 180 | 540 |
| 1801* | 15000 | 30000 | 210 | 630 |
| **Wt. Average** | **9475** | **25712** | **144** | **553** |

f) **House Service Connection Deposit & User Charges:**

The Corporation shall increase the house service connection deposit & user charges (tariff) by a minimum of 10% of the base rate on completion of first five years of operation and a minimum of 10% of the prevailing rate thereafter once in every five years.

g) **Separate Project Account:**

The Corporation shall open a separate "Project Account" for the sub-project assisted under TNUFIP T-3 in the Books of Accounts of the Corporation.

h) **Project Accounts:**

The Corporation shall maintain all the Receipt and Payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under TNUFIP separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be obtained periodically (monthly/quarterly) by the Corporation and maintained separately. The Corporation shall close the Project Accounts on 31st March every year. The first year Project Accounts shall be closed on 31st March 2023. The Corporation shall produce Project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

i) **Operation & Maintenance**

The Corporation shall operate sustainably, maintain the project assets in good working condition and meet the operations & maintenance cost from the user charges collected from beneficiaries and deficit in O & M shall be met out of the general funds of the Corporation.

j) **Loan from others:**

The Corporation shall not avail any fresh loans for this Project from banks, institutions or any other agency during the tenure of the Loan without obtaining prior written approval from the TNUIFSL.

k) **Environmental Assessment & Review Framework (EARF) and Resettlement Framework (RF):**

The Corporation shall implement the Project according to the Environmental Assessment & Review Framework (EARF) and Resettlement Framework (RF) developed by TNUIFSL.

l) **Debt Service Payment:**

The Corporation shall honour the debt service payment on the respective due date prescribed by TNUDF. If the Corporation fails to honour the debt service on the respective due date, the same shall be recovered from the State Finance Commission Devolution Grant through the Commissioner of Municipal Administration.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் மூலம் KFW assisted SMIF-TN-III- வங்கியிலிருந்து கடன் தொகை ரூ.111.53-கோடி மற்றும் மானியதொகை ரூ.111.52–கோடியும் பெறுவதற்கு Term Loan Agreement, Tripartite Agreement for operation of Designated Project Account போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 653**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**23. E7/010447/24**

மதுரை மாநகராட்சியில் பல்வேறு நிதிகளின் கீழ் ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற நிலையில் அதற்கான இறுதி பட்டியல் தொகைகள் விடுவிக்கப்பட்டு. மதுரை மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடமிருந்து இவ்வேலைக்களுக்கான தணிக்கை தடைகள் நீக்கம் செய்து அதற்கான குறிப்புகள் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், அரசாணை எம். எஸ். எஉ.621 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 08.04.1980ன் படி இப்பணிகளின் போது செலுத்தப்பட்ட வைப்பு தொகை செலுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுறும் நாளில் காலவதியாகிறது எனவும் காலவதியான வைப்பு தொகையினை காலவதியான நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் வரை மாமன்றத்தின் அனுமதி பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | .வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய நாள் | வைப்புத் தொகை டெண்டர் டெபாசிட் | வைப்புத் தொகை EMD |
|---|---|---|---|---|---|---|
| 1 | Mapo2 / EST : 765 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–43 ல் அமைந்துள்ள ஆணையாளர் Camp Office புதியதாக குடில் கட்டுதல் மற்றும் இயற்கை உரம் தயாரிக்கும் On Site Composting S.S. அமைத்தல் செட் அமைத்தல் மற்றும் Camp Office உள்ளே ஏசி அமைத்தல் மற்றும் மிள் | ரூ.12.90 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.11330.00 | ரூ.11470.00 |

| வ. எண் | .வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய நாள் | வைப்புத் தொகை டெண்டர் டெபாசிட் | வைப்புத் தொகை EMD |
|---|---|---|---|---|---|---|
| | சாதன பணிகள் மற்றும் Table and Chair அமைக்கும் பணி | | | | | |
| 2 | Mapo2 / EST: 763 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–43 ல் உள்ள மாநகராட்சி அலுவலர் குடியிருப்பு 50/2 கட்டிடம் பராமரிப்பு பணி | ரூ.4.10 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.3600.00 | ரூ.3640.00 |
| 3 | Mapo2 / EST: 629 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–47 ல் உள்ள புது நத்தம் ரோடு ஆயுதப்படை மைதானம் உட்புரம் கிழக்கு பக்கம் அமைக்கவுள்ள உடற்பயிற்சி கருவி பொருத்தும் இடத்தில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | ரூ.4.60 லட்சம் | G.அறிவழகன் | 21.01.2020 | ரூ.4100.00 | ரூ.2752.00 |
| 4 | Mapo2 / EST: 115 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–3 வார்டு–29 ல் உள்ள மஸ்தான்பட்டியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் பணி | ரூ.15.50 லட்சம் | G.அறிவழகன் | 05.08.2019 | ரூ.13600.00 | ரூ.13800.00 |
| 5 | Mapo2 / EST: 628 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–47 ல் உள்ள புது நத்தம் ரோடு ஆயுதப்படை மைதானம் உள்புரம் கிழக்கு பக்கம் உடற்பயிற்சி கருவிகள் பொருத்துவது சம்மந்தமாக | ரூ.9.00 லட்சம் | G.அறிவழகன் | 21.01.2020 | ரூ.8400.00 | ரூ.8366.00 |
| 6 | Mapo2 / EST:1199 / 18-19 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–33 மாநகராட்சி மருத்துவ மனையில் கூடுதல் வசதி செய்யும் பணி. | ரூ.15.20 லட்சம் | G.அறிவழகன் | 05.08.2019 | ரூ.12950.00 | ரூ.13875.00 |
| 7 | Mapo2 / EST:766 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–43 ல் அறிஞர் அண்ணா மாளிகை வளாகத்தின் உள்ளே பராமத்து பணி. | ரூ.2.00 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.1750.00 | ரூ.1784.00 |
| 8 | Mapo2 / EST:764 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–33 ல் மேயர் பங்களா கட்டிடத்தை பராமத்து பணி. | ரூ.3.00 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.2700.00 | ரூ.2569.00 |
| 9 | Mapo2 / EST:761 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–43 உள்ள மாநகராட்சி அலுவலர் குடியிருப்பு 50/3 கட்டிடம் பராமரிப்பு பணி | ரூ.2.65 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.2400.00 | ரூ.2280.00 |
| 10 | Mapo2 / EST:760 / 19-20 மதுரை மாநகராட்சி–மண்டலம்–2 வார்டு–42 உள்ள மாநகராட்சி Guest House மராமத்து பணி | ரூ.4.10 லட்சம் | G.அறிவழகன் | 27.02.2020 | ரூ.3600.00 | ரூ.3646.00 |
| 11 | Mapo5 / EST:903 / 17-18 மதுரை மாநகராட்சி–மண்டலம்–1 வார்டு–33 ல் உள்ள அண்ணாநகர் ஆரம்ப சுகாதார மையம் மின்சார வசதி செய்தல் | ரூ.8.40 லட்சம் | G.அறிவழகன் | 29.05.2018 | ரூ.8200.00 | ரூ.6800.00 |
| 12 | Mapo4 / EST:239 / 19-20 மதுரை மாநகராட்சி-மண்டலம்-4 வார்டு-80 ல் உள்ள | ரூ.9.20 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 03.09.2019 | ரூ.6000.00 | ரூ.10264.00 |

| வ. எண் | .வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஓப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய நாள் | வைப்புத் தொகை டெண்டர் டெபாசிட் | வைப்புத் தொகை EMD |
|---|---|---|---|---|---|---|
| | ராணி மங்கம்மாள் சத்திரத்தில் பராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்க்கு Aluminium Partition அமைக்கும் பணி | | | | | |
| 13 | Mapo1 / EST:729 / 18-19 மதுரை மாநகராட்சி-மண்டலம்-1 வார்டு-23 ல் உள்ள செக்கநாதபுரம் 2வது தெருவில் தார் சாலை அமைத்தல் | ரூ.28.50 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 04.01.2019<br>07.02.2019 | ரூ.28530.00<br>(24730+3800) | ரூ.17282.00 |
| 14 | Mapo7 / EST:657 / 19-20 மதுரை மாநகராட்சி- வைகை குடிநீர் பிரிவு பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் VIP Bunglow பராமத்து பணி | ரூ.23.50 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 24.02.2020 | ரூ.16500.00 | ரூ.25040.00 |
| 15 | Mapo1 / EST:487 / 19-20 மதுரை மாநகராட்சி- வைகை குடிநீர் பிரிவு பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஊழியர் குடியிருப்பு பராமத்து பணி | ரூ.14.50 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 10.12.2019 | ரூ.13000.00 | ரூ.12630.00 |
| 16 | Mapo2 / EST:165 / 20-21 மதுரை மாநகராட்சி-மண்டலம்-2 வார்டு-43 ல் உள்ள அறிஞர் அண்ணா மாளிகையில் உள்ள முதல் தளம் மற்றும் தரை தளம் கோவிட் -19 அறையில் மராமத்து பணி | ரூ.4.99 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 24.09.2020 | ரூ.3700.00 | ரூ.5115.00 |
| 17 | Mapo2 / EST:771 / 20-21 மதுரை மாநகராட்சி-மண்டலம்-2 வார்டு-37 ல் உள்ள செல்லூார் ரவுண்டானா SS HandRails and Granite Work அமைப்பது | ரூ.6.00 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 23.02.2021 | ரூ.6000.00 | ரூ.4600.00 |
| 18 | Mapo1 / EST:960 / 18-19 மதுரை மாநகராட்சி-மண்டலம்-1 வார்டு-23 ல் உள்ள விளாங்குடி மெயின் ரோடு பகுதியில் புதிதாக தார் சாலை அமைத்தல் | ரூ.37.50 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 07.02.2018 | ரூ.37500.00 | ரூ.28794.00 |
| 19 | Mapo5 / EST:758 / 19-20 மதுரை மாநகராட்சி- வைகை குடிநீர் பிரிவு பண்ணைப்பட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அலுவலக குடியிருப்பு பராமத்து பணி | ரூ.26.00 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 06.10.2020 | ரூ.23000.00 | ரூ.22258.00 |
| 20 | Mapo2 / EST:922 / 19-20 மதுரை மாநகராட்சி- மண்டலம்-2 வார்டு-37 ல் உள்ள செல்லூார் ரவுண்டானா பகுதியில் சிறப்பு அபிவிருத்தி வேலைகள் செய்தல் | ரூ.18.90 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 17.03.2020 | ரூ.16500.00 | ரூ.16900.00 |
| 21 | Mapo4 / EST:1058 / 18-19 மதுரை மாநகராட்சி- மண்டலம்-4 வார்டு-95 ல் உள்ள திருப்பரங்குன்றம் வார்டு அலுவலகம் பின்புறம் புதிதாக 6" விட்ட போர் வெல் அமைப்பது தொடர்பாக | ரூ.3.63 லட்சம் | P.T.சுப்பிரமணியன் | 22.07.2019 | ரூ.3630.00 | ரூ.2786.00 |
| 22 | Mapo4 / EST:608 / 18-19 மதுரை மாநகராட்சி- மண்டலம்-2 வார்டு-33 ல் உள்ள அறிஞர் அண்ணாநகர் பிளாட் எண்:429 மாநகராட்சி பூங்கா புதிதாக Onsite Composting Yard அமைக்கும் பணி | ரூ.3.10 லட்சம் | M.புஷ்பராஜ் | 16.11.2018 | ரூ.2710.00 | ரூ.2810.00 |

அதனடிப்படையில் மேற்கண்ட அரசாணையின் படி மூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்ததாரர்கள் செலுத்திய வைப்புத் தொகை 1% மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்த 1% EMD–தொகைகள் காலவதியான நிலையில் அன்னார்களுக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 654**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**24. Z3/E2/Est.No.01/24-25**

மதுரை மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்–51ல் உள்ள பேச்சியம்மன் படித்துரை சாலையில் அமைந்துள்ள கஸ்தூரிபாய் காந்தி பள்ளியில் பழைய பழுதடைந்த கட்டிடைத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.5.00/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 07.06.2024 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 18.06.2024 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. திருமதி.B.பவாணி : மதிப்பீடு விலையை விட 0.00% சமம்
2. திரு.K.கணேசன் : மதிப்பீடு விலையை விட 7.30% அதிகம்
3. திரு.M.மகேஷ் கண்ணன் : மதிப்பீடு விலையை விட 1.68% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருமதி.B.பவாணி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைவிகிதத்திலிருந்து 0.00% சமமான விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலைவிகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் 22.06.2024 அன்று ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 655**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**25. Mapo2/10764/2020**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 மற்றும் CITIES 2.0 மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்படும் நிலையில் உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகளை ஒப்புநோக்கு செய்வது, விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்வது, வேலை உத்தரவு தயார் செய்தல் மற்றும் இதர தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது. இப்பணிகளுக்கு பொறியில் பிரிவில் நிர்வாகப்பொறியாளர்கள் உதவி நிர்வாகப்பொறியாளர்கள், மற்றும் வரைவாளர்கள் அடங்கிய ஒப்புநோக்கு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவிற்கு தொழில்நுட்ப ரீதியாக உதவும் வகையில் அனுபவம் பெற்ற அலுவலர் ஒருவரை தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து ஒய்வுபெற்ற திரு.முனீஸ்வரன், தலைமை வரைவாளர் அவர்கள் தொழில்நுட்ப ரீதியாகவும், இதர தகுதிகளையும் ஒப்புநோக்கு செய்வதில் முன் அனுபவம் பெற்றுள்ளார். எனவே அன்னாரை 10.07.2024 முதல் 10.07.2025 வரை மாதம்தோறும் ஒரு வருட

காலத்திற்கு மட்டும் ரூ.40000- என்ற ஊதியத்தின் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யவும், இச்செலவினத்தை மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 656**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**26. H2/027190/2018**

மதுரை மாநகராட்சியில் 5 மண்டலங்களில் பணிபுரியும் 637 தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.558/- வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட தினக்கூலி தூய்மை பணியாளர்கள் விடுப்பின்றி 89 நாட்கள் பணிக்கு வந்தபின் ஒரு நாள் விடுவித்து (Break) பணி வழங்கவும் மற்றும் தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு பணிக்கு வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு தொகை ரூ.594/- என நிர்ணயம் செய்து அக்டோபர் 2024 முதல் வழங்கவும் அதற்கான செலவினத்தை மதுரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 657**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒப்பம்) வ.இந்திராணி**

**இடம்: மதுரை** **மேயர்**

**நாள் : 27.09.2024** **மதுரை மாநகராட்சி**